ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2025/18 - 2017 ජූනි මස 27 වැනි අඟහරුවාදා - 2017.06.27

*2025/18 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்**

*15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், மொறட்டுவை மாநகர சபை எல்லைக்குள்ளான கீழே விபரிக்கப்பட்ட காணியினை இன்றிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இக்கட்டளை மூலம் உடைமையாக்குகின்றேன்.*

பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா.உ.),
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17ஆம் மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹுறுபாய"
சுபூத்திபுர வீதி,
பத்தரமுல்லை.
2017, யூன் 20.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவு, மொறட்டுவை மாநகர சபை எல்லையுள்ளான மதிப்பீட்டு இல. 546 மற்றும் 548 இன் கட்டுபெத்தவில் அமைந்துள்ள காணியானது பதிவு செய்யப்பட்ட நிலஅளவையாளர் மற்றும் மட்டமிடுநர் திரு. எம். எஸ். மெண்டிஸ் என்பவரால் 1980.11.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு, பூர்வாங்க மாதிரிப்பட இல. 2398 என காட்டப்பட்டுள்ளது.

அதன் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 32.18 பேர்ச்சஸ்) ஆகும்.

வடக்கு : பி. ஏ. அல்விஸ் பெரேரா மாவத்தையும்;
கிழக்கு : ஏ. ஏ. அமராவத்தி மற்றும் யூ. என். பெர்னாண்டோ என்பவர்களது ஆதனத்தையும் ;
தெற்கு : எஸ். டி. பிரான்சிஸ் அப்புஹாமி என்பவரது ஆதனத்தையும் ;
மேற்கு : காலி வீதியையும் எல்லைகளாக கொண்டுள்ளது.

07 - 306

## தேசிய அரசப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்

*15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 15 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபைக்குள்ளான கீழே விபரிக்கப்பட்ட காணியினை இவ்வறிக்கை திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இக்கட்டளை மூலம் உடைமையாக்குகின்றேன்.*

*பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா.உ.),*
*பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.*

*பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,*
*17ஆம் மற்றும் 18 ஆம் மாடிகள்,*
*"சுஹூறுபாய"*
*சுபூத்திபுர வீதி,*
*பத்தரமுல்லை.*
*2017, யூன் 20.*

### அட்டவணை

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுர பிரதேச சபையினுள் அடங்கியுள்ள ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை மாநகர சபை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை பிரதேச செயலக பிரிவில் இல. : 07, நுகேகொடை பிரிவு இல. 07 இல் அமைந்துள்ளதும், பதிவு செய்யப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் மற்றும் மட்டுநருமான திரு. டி. ஜோய். டி. சில்வாவினால் 2008.08.30 இல் தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இல. 70/2008 இல் காணித்துண்டு இல. A ஆனது 02ஏ. 01றூ. 10 பேர்ச்சஸ் இனைக் கொண்டது. அதன் விஸ்தீரணம் (0.9373 ஹெக்டெயார்) ஆகும்.*

*காணியானது பின்வரும் எல்லைகளால் சூழப்பட்டுள்ளது.*

*வடக்கு : ஸ்ரான்லி திலக்கரட்ன மாவத்தை மற்றும் பழைய கெஸ்பேவ வீதி ;*
*கிழக்கு : பழைய கெஸ்பேவ வீதி ;*
*தெற்கு : வீதி ;*
*மேற்கு : ஸ்ரான்லி திலக்கரட்ன மாவத்தை.*

*07 - 307*